Malai Malar / மாலை மலர்

9 NOV 2025

புதுவை பல்கலைக்கழகத்தில்

# ட்ரோன் தொழில்நுட்ப பயிற்சி

புதுச்சேரி, நவ.9—

புதுவை பல்கலைக் கழகத்தில் ட்ரோன் தொழில்நுட்பத்தில் கணினி மற்றும் நடைமுறை அம்சங்கள் என்ற தலைப்பில் 5 நாள் பயிற்சி முகாம் நடக்கிறது.

பசுமை எரிசக்தி தொழில்நுட்ப துறையும், ரூர்கேலா தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் இயந்திர பொறியியல் துறையும் இணைந்து பயிற்சியை நடத்துகிறது. பயிற்சி முகாம் தொடக்க விழாவில் ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் செல்வகுமார் வரவேற்றார்.

மதன்ஜீத் பசுமை எரிசக்தி தொழில்நுட்ப புலத்தின் முதன்மையர் ஜாபர் அலி, ரூர்கேலாவின் இயந்திர பொறியியல் துறை உதவி பேராசிரியர் பாலாஜி ஆகியோர் பயிற்சி முகாம் ஏற்பாடுகளை செய்தனர். விர்ஜீனியா டெக் இந்தியாவின் இயக்குனர் பத்மநாபன் தலைமை வகித்தார்.

புதுவை பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு தொடக்க உரையாற்றினார். பசுமை எரிசக்தி தொழில்நுட்ப துறையின் தலைவர் அருண் பிரசாத் நன்றி கூறினார். இந்த பயிற்சி முகாமில் ட்ரோன் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு சார்ந்த வான்வழி அமைப்பு கள், விமான கட்டுப்பாடு மற்றும் பார்ம்வேர் அடிப்ப டைகள், ட்ரோன் பாகங்க ளின் 3—டி வடிவமைப்பு மற்றும் அச்சிடுதல் குறித்து நிபுணர்களின் விரிவுரைகள், நேரடி பயிற்சி அமர்வுகள் நடக்கிறது.